# சென்னையில் ஜூலை 11, 12-இல் பட்டாசுக் கண்காட்சி

**சிவகாசி, ஜூன் 6:** தமிழ்நாடு பட்டாசு வணிகர்கள் கூட்டமைப்பின் சார்பில் சென்னையில் ஜூலை 11, 12-ஆம் தேதிகளில் பட்டாசுக் கண்காட்சி நடைபெற உள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பின் மாநிலத் தலைவர் வி.ராஜா சந்திரசேகரன், பொதுச் செயலர் என்.இளங்கோவன் ஆகியோர் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சிவகாசியில் பட்டாசுத் தொழில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் விதமாக சென்னை நீலாங்கரை ஆர்.கே.அரங்கில் பட்டாசுக் கண்காட்சி, சங்கத்தின் மாநில மாநாடு நடைபெற உள்ளது. சிவகாசி பட்டாசு வணிகத்தை சர்வதேச அளவில் எடுத்துச் செல்லும் வகையில் இந்தக் கண்காட்சி அமைக்கப்பட உள்ளது. இதில் மத்திய, மாநில அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள், பட்டாசு பாதுகாப்பு நிபுணர்கள் கலந்து கொள்கின்றனர்.

இரண்டு நாள்கள் நடைபெறும் இந்த மாநாடு, கண்காட்சியில், இந்திய அளவில் ஆயிரக்கணக்கான பட்டாசு வணிகர்கள் கலந்து கொள்வர்.

பட்டாசுத் தொழிலை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லும் வகையிலும், ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களை உருவாக்கவும், இந்தக் கண்காட்சி பெரிதும் உதவும் என எதிர்பார்க்கிறோம் என்றனர் அவர்கள்.

கூட்டமைப்பின் மாநில கூடுதல் பொதுச் செயலர் எஸ்.ரவிதுரை, மாநில துணைத் தலைவர் டி.பிரபாகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# பிரதமர் மோடி பாராட்டிய மின்சாரம் தயாரிக்கும் ஆலை புத்துயிர் பெறுமா?

நமது நிருபர்

**சிவகங்கை, ஜூன் 6:** மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பாராட்டிய உணவுக் கழிவுகள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் ஆலையை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் வலியுறுத்தினர்.

சிவகங்கை மாவட்டத்தில் 7 ஊராட்சிகளில் ரூர்பன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த் திட்டத்தில் அப்போதைய மாவட்ட ஆட்சியர் மதுசூதன் ரெட்டி, ஊராட்சித் தலைவர் மணிமுத்து ஆகியோர் முயற்சியால் ரூ.66 லட்சத்தில் காஞ்சிரங்காலில் நிறுவப்பட்ட உணவுக் கழிவுகள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் ஆலையை கடந்த 10.8.2021 -ல் அப்போதைய அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்.

இந்த ஆலையில் நாளொன்றுக்கு 2 டன் உணவுக் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திறன் கொண்ட இயந்திரங்கள் அமைக்கப்பட்டன. இதற்காக காஞ்சிரங்கால் ஊராட்சி, சிவகங்கை நகராட்சி ஆகிய பகுதிகளில் தினமும் காய்கறி, கோழி, மீன் ஆகிய உணவுக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, அவற்றை அரைத்து நீரில் கலந்து அங்குள்ள கிடங்கில் ஊற்றியபிறகு அவை மக்கி மீத்தேன் வாயுவாக மாறுகிறது. பிறகு அதன் மூலம் மின்னாக்கியை இயக்கியதன் மூலம் 220 கிலோ வாட் மின்சாரம் தயாரிக்கப்பட்டது.

இதில் கிடைத்த மின்சாரத்தை காஞ்சிரங்காலில் உள்ள 20 தெரு விளக்குகள், 4 பேட்டரி வாகனங்கள், அங்குள்ள மின் மோட்டார் ஆகியவற்றுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இதனால், ஊராட்சிக்கு மின் கட்டண செலவு பல ஆயிரம் மீதமானது. இதுகுறித்து, மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பாராட்டினார்.

இந்த மின்தயாரிப்பு ஆலையை நிறுவிய தனியார் நிறுவனம் 2023-ஆம் ஆண்டு வரை பராமரித்து வந்தது. பின்னர், ஊராட்சி நிர்வாகமே மின்சாரம் தயாரிக்கும் பணியை மேற்கொண்டு வந்தது.



சிவகங்கை அருகேயுள்ள காஞ்சிரங்காலில் முடங்கிய உணவுக் கழிவு மூலம் மின்சாரம் தயாரிக்கும் ஆலை.

இந்நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு இயந்திரம் பழுதடைந்ததன் காரணமாக மின்உற்பத்தி முடங்கியது. மேலும் பல லட்சம் மதிப்பிலான இயந்திரங்கள் வீணாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த மின் உற்பத்தி ஆலையை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் கூறியதாவது:

உணவுக் கழிவுகள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் ஆலையை நிறுவிய தனியார் நிறுவனம்தான் இயந்திரத்தின் பழுதை நீக்க முடியும். அந்த நிறுவனத்துடன் பேசி வருகிறோம். விரைவில் அந்த ஆலை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்றனர்.

# சிவகங்கை அருகே காரில் ஆயுதங்களுடன் வந்த இருவர் கைது

**சிவகங்கை, ஜூன் 6:** சிவகங்கை மாவட்டம், மதகுபட்டியில் வியாழக்கிழமை நள்ளிரவு போலீஸார் நடத்திய வாகன சோதனையின்போது கடப்பாறை உள்ளிட்ட ஆயுதங்களுடன் காரில் வந்த இருவரை கைது செய்தனர்.

சிவகங்கை மாவட்டம், மதகுபட்டியில் கல்லல் சாலைப் பிரிவில் போலீஸார் வாகனத் தணிக்கை மேற்கொண்டிருந்தபோது, அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனையிட்டனர். அந்த வாகனத்தின் முன்புறம் ஒரு பதிவெண்ணும், பின்புறம் வேறொரு பதிவெண்ணும் இருந்தது கண்டு அதிர்ச்சி அடைந்த போலீஸார், காரில் இருந்த மானாமதுரை அருகே சங்கமங்கலத்தைச் சேர்ந்த அஜித் குமார் (27), சிவகங்கை அருகே டி. புதூரைச் சேர்ந்த சரண் ராஜ் (22), ராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூரைச் சேர்ந்த வெற்றி (22) ஆகிய மூவரிடம் விசாரித்தனர். அவர்கள் முன்னுக்குப்பின் முரணாகப் பதிலளித்தனர்.

இதையடுத்து, அவர்களைப் பிடிக்க முயன்றபோது வெற்றி என்பவர் தப்பியோடினார். மற்ற இருவரையும் பிடித்த போலீஸார், அவர்களிடம் விசாரணை செய்தனர். இதில், புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி பகுதியில் ஒரு வீட்டில் திருடச் செல்வதற்காக அவர்கள் மதுரையில் வாடகைக்கு காரை எடுத்து வந்ததும் தெரிய வந்தது.

ஏற்கெனவே பொன்னமராவதிக்கு சங்கமங்கலத்தைச் சேர்ந்த சசிகுமார் (24), ராகுல், மணக்கரையைச் சேர்ந்த கதிர் (22) ஆகியோர் சென்றுவிட்டதாகவும் போலீஸாரிடம் தெரிவித்தனர். இதையடுத்து, அஜித் குமார், சரண் ராஜ் ஆகிய இருவரையும் போலீஸார் கைது செய்து, காரை பறிமுதல் செய்தனர். மற்ற நான்கு பேரையும் தேடி வருகின்றனர்.

# மருது அய்யனார் கோயிலில் புரவி எடுப்பு திருவிழா

**திருப்பத்தூர், ஜூன் 6:** சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகே மருதிப்பட்டி மருது அய்யனார் கோயிலில் புரவி எடுப்புத் திருவிழா சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவையொட்டி கடந்த மாதம் சதுர்வேத மங்கலத்தில் பிடிமண் கொடுக்கப்பட்டு, 2 அரண்மனை புரவிகள், 9 நேர்த்திக் கடன் புரவிகள் செய்யப்பட்டன.

இவற்றை வியாழக்கிழமை சதுர்வேத மங்கலத்தில் இருந்து மருதிபட்டி புரவி திடலுக்கு பக்தர்கள் சுமந்து வந்தனர். வெள்ளிக்கிழமை புரவி திடலிலிருந்து கச்சேரி திடலுக்கு வண்ண மலர், பலூன், கண்ணாடி ஆகிய அலங்காரத்துடன் புரவிகள் கொண்டுவரப்பட்டன.


மருதிப்பட்டி மருது அய்யனார் கோயிலில் சனிக்கிழமை நடைபெற்ற புரவி எடுப்புத் திருவிழாவில் புரவிகளை சுமந்து சென்ற கிராம மக்கள்.

தொடர்ந்து சனிக்கிழமை மாலை சாமி ஆட்டத்துடன் கச்சேரி திடலிலிருந்து மருது அய்யனார் கோயிலுக்கு அரண்மனை புரவிகள் முன் செல்ல நேர்த்திக்கடன் புரவிகள் ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துச் செல்லப்பட்டன.

இதில் மருதிபட்டி, சுற்று வட்டார கிராம மக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# ராஜபாளையத்தில் ஜி.ஆர்.டி. தங்க நகை மாளிகை கிளை திறப்பு

**ராஜபாளையம், ஜூன் 6:** விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் ஜி.ஆர்.டி. தங்க நகை மாளிகையின் 67-ஆவது கிளை திறப்பு விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

ராஜபாளையம்- முடங்கியாறு சாலை உழவர் சந்தை அருகே திறக்கப்பட்ட இந்த கிளையில் தங்கம், வைர நகைகளின் புதிய வடிவமைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் வெள்ளி நகைகள், வெள்ளி பூஜை பொருள்கள் உள்ளிட்ட அழகிய வெள்ளிப் பொருள்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. இந்த கிளையின் திறப்பு விழாவையொட்டி, சிறப்பு சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

திறப்பு விழாவில் ஜிஆர்டி. தங்க நகை மாளிகையின் நிர்வாக இயக்குநர்கள் ஜி.ஆர். ஆனந்த், அனந்த பத்மநாபன், ஜி.ஆர்.ராதா கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

**ராஜபாளையம் (சோழபுரம்)**

**அடைக்கலம் காத்த அய்யனார் கோயில்:** மண்டல பூஜை விழா, காலை 10.

**சத்திரப்பட்டி**

**தண்டாயுதபாணி சுவாமி கோயில்:** மண்டல பூஜை, காலை 10.

**பரமக்குடி (எமனேசுவரம்)**

**ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில்:** வைகாசி திருவிழாவில் கந்தவடி உத்ஸவம், பெருமாள் கருட வாகன புறப்பாடு, இரவு 7.30.


**NOTICE**

Notice is hereby given that the Special General Body Meeting of Southern Green Farming and Marketing Multi State Co-operative Society Limited will be held at 10:30 am on 20.06.2026 Saturday at Snehanjali Auditorium (Near Aradhana Tourist Home) Kallai Road, Kozhikode. All Members of the society are requested to attend the meeting. The Agenda of the meeting will be circulated separately.

(By Order of the Board)
Sd/-Chairman

தமிழ்நாடு அரசு

**உயர்கல்வித்துறை**

**தலைமைச் செயலகம், சென்னை-600009**

விளம்பரம்

2026-ஆம் ஆண்டுக்கான **"டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் விருதானது" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் சுதந்திர தின விழாவின் போது, விஞ்ஞான வளர்ச்சி, மனிதவியல் மற்றும் மாணவர்கள் நலன் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரு நபருக்கு வழங்கப்படுகிறது. **ரூ.5.00 இலட்சத்துக்கான காசோலையும், தங்கத்தினாலான பதக்கம்** மற்றும் **பாராட்டு சான்றிதழ்** ஆகியவை இந்த விருதில் அடங்கும்.

இவ்விருதுக்கான விண்ணப்பம், விரிவான தன் விவரக் குறிப்பு, உரிய விவரங்கள் மற்றும் அதற்குரிய ஆவணங்களுடன் **15.07.2026** அன்று அல்லது அதற்கு முன்பாக https://awards.tn.gov.in என்ற வலைதளத்தில் விண்ணப்பிக்கலாம். இணையவழி வாயிலாக சமர்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். விருது பெற தகுதி உள்ளவர், தமிழக அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்படுவார்.


வி. அருண் ராய்,
அரசு செயலாளர்

செ.ம.தொ.இ.488/வரைகலை/2026





22-வது ஆண்டு நினைவஞ்சலி



**S.N.தங்கராஜன் நாடார்**

தாரண வருடம் வைகாசி மாதம் 24ம் நாள் (06.06.2004)

தங்கள் பிரிவால் வாடும் மகன்கள், மருமக்கள், பேரன்கள், பேத்தி மற்றும் குடும்பத்தினர்.

சிவகாசி





**பேங்க் ஆஃப் பரோடா, கிளை - புதுவயல் கிளை**

Bank of Baroda

எண்-6, அறந்தாங்கி சாலை, புதுவயல்- 630108, தொலைப்பேசி-04565-282247, அலைபேசி - 9489205943, மின்னஞ்சல்- puduva@bankofbaroda.com]

**மின்னணு ஏல அறிவிப்பு**

பின்னிணைப்பு-E [நாளிதழ் வெளியீட்டுக்கான சுருக்கப்பட்ட விற்பனை அறிவிப்பு] அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு இணைப்பு- IV-A [பார்க்க விதி 6(2) & 8(6)]

**பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம்' 2002 உடன் படிக்க பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 6(2) & 8(6) க்கான விதியின் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு**

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு(கள்)-இல் உள்ள நிலுவைகளை திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த வங்கியிடம் அடமானம்/ அடகு வைக்கப்பட்டுள்ளதும் ஈடு பெற்றுக் கடனளித்த பேங்க் ஆஃப் பரோடாவின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)/ கடனீட்டுச் சொத்துகள்/ நிலுவைத்தொகை/ குறைந்தபட்சக் கேட்பு விலை/ மின் ஏல நாள் & நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல உயர்வுத்தொகை ஆகிய விபரங்கள் பின்வருமாறு.

| வ / லாட் எண். | கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர் | அசையாச் சொத்தின் சுருக்கமான விபரம், அறியப்பட்ட வில்லங்கங்கள் ஏதேனும் இருந்தால், அவற்றுடன் ( அடமானம் வைத்தவர்____) | மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் / குறைந்தபட்ச விலை முன்வைப்புத்தொகை மற்றும் ஏல உயர்வுத்தொகை | சொத்து ஆய்வு தேதி & நேரம் / சுவாதீன நிலை (ஆக்கபூர்வம் / இயற்கை சுவாதீனம்) |
|---|---|---|---|---|
| 1. | **கடன்தாரர் :- M/s.கலைசெல்வம் மாடர்ன் ரைஸ் மில், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு.S.செல்வம் மில்** முகவரி : 46/1, பங்களா ஊரணி, புதுவயல், சிவகங்கை-630 108 **ஜாமீன்தாரர்: திருமதி.புஷ்பவல்லி, W/O செல்வம்,** எண்:3-3-1/1 உயர்நிலைப்பள்ளி சாலை, புதுவயல் கிராமம், காரைக்குடி தாலுக்கா, சிவகங்கை. | 31-05-2026 அன்றுள்ளபடி ரூ.3,13,32,974.64 + அதற்கான வட்டி மற்றும் இதர கட்டணங்கள் | 29-06-2026 தேதி காலை 10.00 மணி - மாலை 6.00 மணி | 24-06-2026 & 25.06.2026 காலை 11.00 மணி - பிற்பகல் 3.00 மணி |
| | | **சொத்து விவரம் :** முறையான அடமான சொத்து- அரிசி மில்- 0.32.0 ஏர்ஸ் நிலம், 34296 சதுர அடிக்கு சமம், பழைய ச எண்.85/7, புதிய ச எண்.85/7A, பட்டா எண்.755 (செட்டில்மெண்ட் பத்திரத்தின் படி) நிலம் மற்றும் அரிசி மில் கட்டிடம் மற்றும் அங்குள்ள இயந்திர தளவாடங்கள் உடன் அமைவிடம் புதுவயல் கிராமம், சாக்கோட்டை குரூப், சாக்கோட்டை யூனியன், காரைக்குடி தாலுகா, காரைக்குடி இணை-I துணை பதிவாளர், காரைக்குடி பதிவு மாவட்டம் மற்றும் திரு.S செல்வம் S/O சண்முகம் (இந்த நிறுவனத்தின் உரிமையாளர்) பெயரில் உள்ளது. **எல்லைகள் :** வடக்கு-தெற்கு தெருவிற்கு கிழக்கு, கிழக்கு-மேற்கு தெருவிற்கு தெற்கு, RM.PL.U.RM உடையப்ப செட்டியார் அவரது மகன்கள் சின்னக்கருப்பன் @ முத்து, ராமசாமி சொத்திற்கு மேற்கு, கிழக்கு-மேற்கு தெருவிற்கு வடக்கு இதிலுள்ள கட்டிடம் கதவு எண்.7 மற்றும் 7A, வரி மதிப்பீடு எண்.451, பழைய மதிப்பீட்டு எண்.495, 448, 496, புதிய மதிப்பீட்டு எண்.537, 608, 539 முறையே. | **குறைந்தபட்ச விலை:** ரூ. 3,16,67,000/- முன்வைப்புத்தொகை - ரூ. 31,67,000/- ஏல உயர்வுத்தொகை - ரூ. 1,00,000/- | இயற்கை SCAN HERE |

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளம்: https://www.bankofbaroda.in/e-auction மற்றும் ஆன்லைன் ஏல போர்ட்டலையும் பார்க்கவும்: https://baanknet.com. மேலும், ஆர்வமுள்ள ஏலதாரர்கள், கிளை மேலாளரைத் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண்.04565-282247, மொபைல் 9489205943

தேதி: 05-06-2026
இடம்: புதுவயல்

பெயர் திரு. நிமல் சுந்தர்
அதிகாரப்பூர்வ அலுவலர்
பேங்க் ஆஃப் பரோடா